# கலித்தொகையில் மானுடவியல்

முனைவர்இரா. சுகுமார்,
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர்.*

**முன்னுரை**

மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல்துறை மானுடவியல் துறை ஆகும். மானுடவியல் என்னும் சொல்லை முதன் முதலில் கிரேக்க அறிஞர் ‘அரிஸ்டாட்டில்’ பயன்படுத்தினார். இந்த மானுடவியல் துறையானது ஒரு சாகத்தின் கடந்த காலத்தை நிகர்காலத்துடன் ஒப்பிட்டும் எதிர்காலத்தை குறித்து ஆராய்கிறது. உலகின் எண்ணற்ற பகுதிகளில் வாழும் பல இன மக்களின் பண்பாடுகளை அறிந்து கொள்ள தேவை ஏற்பட்டதன் காரணமாக மானுடவியல் துறை தோன்றியது. உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டினை இத்துறை ஆராய்ந்து வருகின்றது.

**மானுடவியலின் ஆய்வெல்லை**

மானுடவியலானது வரலாற்று அடிப்படையிலான வளர்ச்சியைத் தன்னகத்தேகொண்டுள்ளதால் இதன் ஆய்வெல்லை மிகப் பெரியது ஆகும். மானுடவியலார் முதன் முதலில் மலை நாட்டுப் பண்பாட்டிற்குத் தெரியவராத மக்களையும் அவர்களின் பண்பாடுகளையும் ஆராய்வதில் முற்பட்டனர். இவ்வாராய்ச்சியானது மனித இனத்தின் உயிரியல் பண்பாட்ட நிலைகளை ஆராய்வது என்ற மிகப் பெரிய இலக்கின் தொடக்கமாக அமைந்தது.

> “இத்துறையானது அனைத்துச் சமுதாயஙங்களையும் ஆராய்கிறது. மனிதனின் உயிரியல் உறவுகள், தகவலமைப்புகள்,மொழி சமூக அமைப்புகள் நடத்தை முறைகள், அரசியல், சமயம், பிற பண்பாட்டு முறைகள் போன்றவை இதற்குள் அடங்கும். இத்துறையில் மக்களின் உணவைசேகரிக்கும் முறை, உணவை பகிர்ந்து கொள்ளும் முறை, வணிகம், பாடல்கள், பண்,இசை, நடனம், சடங்குகள்,மந்திரங்கள்ஈநோய் கோட்பாடுகள் நீக்கம் முறை போன்ற ஆய்வைக் வுறுகளும் உள்ளது.”[1]

**மானுடவியலின் தோற்றம்**

> “கல்வி சார் நிலையில் மானுடவியல் துறை தோன்றி ஏறக்குறைய 119 ஆண்டகள் ஆகின்றது. “சர் எட்வர்ட் பர்னட் டைலர்” கி.பி. 1884 –ம் ஆண்ட ஆக்டுபோர்ட பல்கலைக் கழத்தில் மானுடவியல் துறைக்கு பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறையானது முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இப்பல்கலைக்ககத்தில் மானுடவியலார் பெற்ற முதல் பதவி ஆகும்.”[2]

இதன் பின்னர் உலகிற்கு மானுடவியல்துறை தோன்றத் தொடங்கியது. தொடக்க காலத் தத்துவவியலார் மனிதனையும் அவனது சமுதாய அமைப்புகளையும் பண்பாட்டுக் காலங்களையும் கண்ணுற்று அவற்றை உய்த்தணரும் போக்கில் பலவாறு சிந்தனை செய்தனர். அச்சிந்தனைகளின் வெளிப்பாடே இன்றைய கால சமுதாய அறவல்களன் வளர்ச்சியாகும்.

**மானுடவியலின் வளர்ச்சி**

மானுடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றுள்ளன. இருப்பினும் மேற்கத்தியத் தத்துவமும்,மேற்கத்திய வரலாற்று நிகர்ச்சிகளும் அடித்தளமாய் அமைந்துள்ளன. மனிதனின் தோற்றம், தன்மை, அவர்களுக்குள்ள வேறுபாடுகள் முதலானவை குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எட்டப்படும். வினாக்கள்இன்றைய மானுடவியலின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன.

ஆய்வின் பல செய்திகளைத் தொகுத்துக் காணும் போது மட்டுமே தொன்மைக் காலத்தில் மனிதனைப் பற்றி அறிவதில் எவ்வாறான சிந்தனைகள்,செயற்பாடுகள் நிலவின என்று அறிய முடியும். தெற்கு மானுடவியலின் வரலாற்றினைப்பல நிலைகளாக பகுத்து அறிய வேண்டியது அவசியம் ஆகும்.

**சங்க இலக்கியமும் வாழ்க்கையும்**

சங்க இலக்கியங்கள் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களின் எண்ணச் சிதறல்கள் ஆகும். இவற்றில்புலவர்கள் மக்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தனித்தனிப் பாடல்களாகப் பாடியுள்ளனார். இவை ஓர் ஒழுங்குப்பட்ட அமைப்பையும் தனிப்பட்ட கோட்பாட்டையும் கொண்டன. சங்க இலக்கியங்களைப் பாடுபொருள் அடிப்படையில் அகம், புறம் என்ற இருபெரும் பிரிவுக்குள் அடக்குவர். அகப்பாடல்கள் தன்னோடுயில்லாத தலைவன், தலைவியரின் இல்லற வாழ்வை எடுத்துரைப்பன. புறப்பாடல்கள் அரசர் முதலான புரவலரின் வீரம், கொடை, புகழ், வெற்றி முதலியவற்றைப்பாடுவன. இவற்றுள் காதல், வீரம் ஆகிய இரண்டும் தலைமை பெற்ற பாடுபொருளாக இருப்பினும் பிற வாழ்வியல் கூறுகளும் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் பாடப்பெறும்.

> “இலக்கியம் மனித வாழ்வோடு பின்னிப்பிணைதல் வேண்டும், மனிதப் பண்பை சித்தரிக்க வேண்டும். மானுடம் பாட வேண்டும். இங்ஙனம் இலக்கியம் மனிதவாழ்வோடு ஒருங்கிணைவதை மனத்துவப்படுத்துதல் என்பர் இன்றைய ஒப்பீட்டறிஞர், சங்க இலக்கியம் மனித வாழ்வில் நிகழும் சூழல்களையும் மனவுணர்களையும் உரிப்பொருளாக்கிப் பாடிய முறை தலைசிறந்த மனிததுவப்படுத்து முறையாகும்”[3]

என இராம.பெரிய கருப்பன் அவர்கள் சங்க இலக்கியங்கள் மாந்தர் வாழ்வியலைச் சிறப்பாகப் பாடுவதை விளக்குவர்.

**குலப்பாகுபாடு**

தொல்காப்பியர் காலத்தில் நால்வகை வருண வேறுபாடுகள் இருந்தமையை நூற்பாக்கள் எடுத்துரைக்கும். வாகைத் திணையின் பாகுபாட்டை விளக்கும் தொல்காப்பியர்,

> “அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்
>
> ஐவகை மரபின் அரசர் பக்கமும்
>
> இருமூன்றும் மரபின் ஏனோர் பக்கமும்”[4]

என்பர். இதில் பார்ப்பனரையும் அரசரையும் வெளிப்படையாகக்கூறி வணிகரையும் ,வேளாளரையும் ‘ஏனோர்” எனப் பொதுவாகச் சுட்டுவர். தொல்காப்பியர் அறுவகை, ஐவகை மரபு, இருமூன்று மரபு எனத் தொகுத்துக்கூறுவதை இளம்பூரணர் விரிவாக விளக்குகிறார். அந்தணர்குரியனவாக ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்,ஈதல், ஏற்றல் என்பனவற்றையும், அரசர்க்குரியனவாக ஓதல், வேட்டல்,ஈதல், படை வழங்குதல்,

குடியோம்புதல் என்பனவற்றையும் குறிப்பிடுவர். வணிகர்க்குரியவனவாக ஓதல் வேட்டல் ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல் என்பவனவற்றையும், வேளாண்மாந்தருக்குரியனவாக உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல் வழிபாடு, வேதம், கல்வி என்பனவாகும்.

தொல்காப்பியர் கால மக்கள், குலத்திற்குத்தக ஒழுகியதை இந்நூற்பா தெளிவாக உணர்த்தும், இச்சமுதாய ஒழுங்கு மக்கள் நடைமுறை வாழ்க்கையை வேறுபடுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**தொழிற்பிரிவுகள்**

ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் பொருள் அடிப்படையாகும். அப்பொருளை ஈட்டுவதற்கு ஏதாவது ஒரு தொழிலைச் செய்தல் வேண்டும். ஒருவர் ஒரு தொழிலைத் தேர்ந்து அதில் ஈடுபடும் பொழுது அத்தொழிலின் இயல்பு அவரது வாழ்க்கையிலும் எதிரொலிக்கும். அவர் செய்யும் தொழிலுக்கேற்ப நடைமுறை வாழ்க்கை அமையும்.

சங்க காலச் சமுதாயத்தில் பலதரப்பட்ட தொழிற் பிரிவினர் உள்ளனர். அந்தணர், பார்ப்பார், துறவியர், வணிகர், உமணர், தச்சர், கொல்லர், கம்மியர், நெசவாளர், குயவர், அறிவர், நாழிகைக் கணக்கர், மருத்துவர், கட்டுவிச்சி, நீகான் (மாலுமி) காரோடன், கூவலர், ஊர்க்காப்பாளர், பெருங்குளக்காவலர், புலையர் ஆகியோரைச் சங்க இலக்கியங்கள் இனம் காட்டும், இவர்கள் தொழிலின் தன்மைக்கேற்ப நடைமுறை வாழ்க்கை வேறுபடும்.

இவற்றால் தொழிற்பிரிவுகள் சங்ககால மக்கள் நடைமுறை வாழ்க்கையை வேறுபடுத்தும் காரணியாவது தெளிவாகும்.

**பூப்பறித்தல்**

பூக்களைப் பறிப்பதும் மகளிர்க்குப் பிடித்த ஒரு விளையாட்டு யாவரும் விரும்புவதும், மங்கலப் பொருளாய் இருப்பதும், கண்ணுக்கும் கருத்துக்கும் பொலிவாய் இருப்பதுமான மணமிக்க சிறுபொருள் பூ, பூப்போன்ற மென்மையுடையவர்கள் பெண்கள், காதலுக்குப் பூக்கள் தூதாவதை,

“முல்லை ஒருகாழும் கண்ணியும், மெல்லியால்

கூந்தலுள் பெய்து முடித்தேன், தோழியாய்

வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே

அன்னைமுன் வீழ்ந்தன்று அப்பூ”[5]

என்னும் பாடல் வரிகளில் குறிப்பிடுகிறது.

**இடையர் மகளிர்**

இடைமகள் பால்விற்கச் செல்கிறாள், பணிமுடித்து வரும் மகளுக்கு மாற்றுடை அணிவித்து அன்னை விளையாட அனுப்புகிறாள். தாயுடனும், தமக்கையுடனும் மோர் விற்கும் பெண்ணின் அழகுக்கண்டு, தலைவியர் ‘கணவர் மனம் மாறிவிடும்’ என அஞ்சுகின்றனர்.

“மாங்காய் நறுங்காடி கூட்டுவேம், மோர் வேண்டாம்”[6]

எனத் திருப்பி அனுப்புகின்றனர். இடைமகள் கொண்டு வரும் மான் தசைக்கும்,

தயிருக்கும் உழவர் பெண் நெல் தருவதை,

“புனத்துளான் எந்தைக்குப் புகாஉய்த்துக் கொடுப்பதோ?

இனத்துளான் என்னைக்குக் கலத்தோடு செல்வதோ?

தினைக்காலுள் யாய்விட்ட கன்று மேய்க்கிற்பதோ”[7]

என்னும் பாடல் வரிகள் ஆயமகளின் தொழில்களை வரிசைப்படுத்துகிறது.

**உழவர் மகளிர்**

உழவர் மகளிர் அறுவடைத் தொழிலில் ஆண்களுக்கு உதவுகின்றனர். அன்னையர் வரகை அறுத்து, திரிகையில் திரித்து உரலில் குற்றிப் பாடலுடன் சேர்த்தும் பொங்கல்வைத்து உண்பர். புதுமணப் பெண் பாலை உலையில் வைத்துப் பேதை மகளிருடன் நெல்லை அவலாக இடிக்கும் வழக்கம் இருந்தது.

“வயக்களிற்றுக்

கோடு உலக்கையாக, நற்சேம்பின் இலைசுளகா

ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்து”[8]

என மகளிர் வள்ளைப்பாட்டு பாடிக்கொண்டு தானியம் குற்றுகின்றனர் என்பது தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**இரந்தவருக்கும் கொடுத்தல்**

இரந்தவர்க்குக் கொடுத்தல் என்பது மிகவும் இயல்பானதொன்றாக அக்காலத்திலிருந்தும் கருதப்பட்டிருந்தது. புறநானூறு, போன்ற பல்வேறு சங்க இலக்கிய நூல்களில் இரந்தவர்க்கு உதவுதல் என்ற கருத்தும் இடம்பெற்றிருப்பதை,

“தொலைவாகி யிரந்தோர்க்கக் கொண்றீயாமையிளிவென

மலையிறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருளாகுமே”[9]

என்ற வரிகளில் முன்பு உண்டான பொருள்களையெல்லாம் மற்றவர்களுக்குக் கொடுத்து அதனால் தொலைந்து பின்பு இல்லையென்று வரும் இரந்தவர்களுக்குச் சிறிதும் கொடுக்கவில்லையென்றால் அது மிகப்பெரிய இழிவாக

அமைந்துவிடும். எனவே அதற்காகவே பல மலைகளை கடந்தாகிலும் பொருள்தேடி சேர்க்க வேண்டுமென்று கூறுகிறது. ஆதலால் இரந்தவர்க்கு, இல்லையென்று கூறாமல் பொருள்தேடி உதவ வேண்டுமென்ற உதவி செய்யும் பண்பு மிகப்பெரிய உயர்ந்த அகப்பண்பாக உள்ளது. இன்று பெரிதளவில் மதிக்கப்படும் பண்பாகும்.

**நேர்மையாக பொருள் ஈட்டல்**

இரந்தவர்க்கு உதவ பொருளீட்டல் வேண்டும். அந்தப் பொருளீட்டல் முறை பற்றியும், தெளிவாக கலித்தொகை வரையறுக்கிறது. பணத்தை நேர்மையான வழியில் பெறவேண்டும். தவறான வழிகளில் பெறும் செல்வமானது நிலைக்காது. இப்பண்பு தொன்றுதொட்டு பழந்தமிழரிடையே நிலைபெற்றிருந்தது என்று கூறினால் அது மிகையாகாது என்பதை,

“செம்மையி னீகந்தொரீ இப்பொருள் செய்யவார்க்கப் பொரு

ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாவோ”[10]

என்ற பாலைக்கலிப்பாடல் செம்மையான வழிகளிலிருந்து விலகி பொருள் தேடுவோர்க்கு அப்பொருள்தான் அவரை விட்டு நீங்கி இம்மையிலும் மறுமையிலும் பகையாவதை அறியாயோ என்பதாக அமைகின்றது. தவறான வழிகளில் பொருள் தேடினால் தீங்கு வரும். இவ்வாறு மாந்தர் வாழ்வுப்பற்றிய பண்பாட்டுப் பெட்டகமாகக் கலித்தொகை விளங்குகிறது.

**விளையாடச் செல்லுதல்**

சங்ககாலப் பெண்கள் பூக்களை வைத்தும் மாலையாகத் தொடுத்தும், பொம்மைகளை வைத்தும் விளையாடி உள்ளனர். ஊசல், ஊர்ந்தாடல் என்பது சிறந்த விளையாட்டாக இருந்ததை,

“தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை

வீழ்ஊசல் தூங்கப்பெறின்

மாழை மடமான் பிணைஇயல் வென்றாய் நில் ஊசல்”[11]

என்கிறது கலித்தொகை.

இதனில் தாழையின் விழுது கயிறாகவும், நெய்தல் மாலையானது அக்கயிற்றில் கட்டிய மாலையாகவும் சுறாவினது மருது பலகையாகவும் அமைக்கப்பட்டதில் பெண்கள் பலர் அமர்ந்து ஊசலாடினர் என்று பெண்ணியத்தின் அடிப்படை சுதந்திரத்தைப் பதிவு செய்துள்ளது.

**திருமணச் சடங்கு**

சங்ககால மகளிரில் குறிப்பாக கலித்தொகைப் பெண்கள் தமக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சினனாகவும் இருத்தல் வேண்டும் என்று தேர்ந்தெடுத்தனர். இக்குறிப்பினைக் கலித்தொகை உணர்த்துகிறது. காளையை அடக்கிய ஆடவனைக் கைப்பிடிக்கும் ஆயமகளிரின் திருமணம் அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவன் தலைவியின் மனமொத்த அன்பினை கூட்டுவித்து தெய்வம் என்று கருதப்பட்டது. மேலும்,

"நேரிழாய் கோள் அரிதாக நிறுத்த கொலை ஏற்றுக்
குரிகதன் அஞ்சான் பயந்த பொதுவற்கே
ஆர்வுற்று எமர்கொடை நேர்ந்தார்"[12]

என்பதினுள் பெண்கள் காளையை அடக்கிய வீரம் மிகுந்தவர்களை மட்டுமே மணம் செய்துள்ளனர். வீரர்கள் அல்லாதவரைப் பெண்கள் ஒருபோதும் மணக்கவில்லை. பெண்கள் திருமணத்தைப் பற்றி முடிவெடுப்பதில் அதிக பங்காற்றியுள்ளனர்.

**தொகுப்புரை**

வாழ்க்கையை அடிப்படையாக வைத்து படைக்கப்படுவது இலக்கியமாகும். மாந்தர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் இலக்கியங்களே கால வெள்ளத்தில் அழியாமல் நிலைத்து நிற்கும். கலித்தொகை மாந்தர் வாழ்வு பற்றிக் கூறி நிலைத்து நிற்கும் இலக்கியடாகத் திகழ்ந்துள்ளது என்பதை எடுத்துரைக்கிறது.

சங்கப்புலவர்கள் அக ஒழுக்கத்தைப் பாடும் பொழுது அந்தந்த நிலத்துக்குரிய கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலைப் பாடியுள்ளனர். அவ்வகையில் கலித்தொகை ஐவகையான நிலங்களில் வாழும் மாந்தர் வாழ்வினை மிகச்சிறப்பாக எடுத்தியம்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

[1] வாழ்வியல் களஞ்சியம், தொகுதி – 12, ப.97
[2] பக்தவச்சலபாரதி., பண்பாட்டு மானுடவியல், ப.8
[3] இராம பெரிய கருப்பன், சங்க இலக்கிய ஒப்பீடு, சங்க இலக்கிய கொள்கைகள், ப.99
[4] தொல்பொருள், புறம் நூ-16
[5] கலி.பா-116: 5-9
[6] மேலது, பா-111
[7] மேலது, பா 108, 31-33
[8] மேலது, பா.40:1, 1-3
[9] கலி. பாலை 13
[10] கலி. .131-6-14
[11] தொல். 625
[12] மணிமேகலை . பா, 46